# கணிதம்

## பகுதி – 1

## வகுப்பு
## IV

**Mathematics**
**Part - 1**
**Std IV**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) கேரளம்

2025

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

## கணிதம்

## 4

*Prepared by :*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in
e-mail : scertkerala@gmail.com, Phone : 0471 - 2341883,
Typesetting and Layout : SCERT
First Edition : 2025
*Printed at* : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பார்ந்த குழந்தைகளே,

கணிதத்தின் அடிப்படை கருத்தாக்கங்களான எண்கள், வடிவங்கள், நேரம், தொடர் அமைப்புகள் போன்றவற்றை நாம் தெரிந்துகொண்டோம் அல்லவா? சிறிய எண்களைக் கூட்டவும் கழிக்கவும் வகுக்கவும் பெருக்கவும் நாம் கற்றுக்கொண்டோம். எண்களுக்கிடையேயான புதிய தொடர்பைக் கண்டுபிடித்தல், தொடர் அமைப்புகளை உருவாக்குதல், முழுமையாக்குதல், கணித பிரச்சினைகளை ஆராய்ந்து பல்வேறு செயல்முறைகளைக் கண்டறிந்து தீர்வு காணுதல் போன்ற எத்தனை எத்தனை திறன்களை நாம் பெற்றுள்ளோம். பெரிய பெரிய எண்களைத் தெரிந்துகொள்ளவும், எண்களுக்கிடையேயான புதிய தொடர்புகளைக் கண்டறியவும், புதிய தொடர் அமைப்புகளை உருவாக்கவும் முழுமையாக்கவும் கற்றல் மற்றும் கணிதச் சிந்தனை என இனியும் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. இதற்காக கணிதத்தின் புதிய வழிமுறைகளின் வாயிலாக நாம் மேலும் உயரங்களுக்குச் செல்வோம்.

அன்புடன்,

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்
எஸ்.சி.இ.ஆர்.டி. கேரளம்

# TEXTBOOK DEVELOPMENT TEAM

## Advisor

**Dr. E Krishnan**
Head, Department of Mathematics (Rtd.)
University College, Thiruvananthapuram

## Chairperson

**Dr. Gokuladasan Pillai C**
Curriculum Head (Rtd.), SCERT

## Experts

**Dr. Rajesh K P**
Senior Lecturer, DIET, Kannur

**Prakashan V K**
Principal (Rtd.), DIET, Kottayam

## Members

**Swaminathan K**
Headmaster (Rtd.) Govt. LP School, Palode,
Thiruvananthapuram

**Biju T**
Headmaster
Govt. SMVLPS
Tevalakkara, Kollam

**Ayswarya Soman**
SMSG UPS
Chandanakunnu
Pathanamthitta

**N Sreevisakhan**
Headmaster (Rtd.)
GLP school
Cherukulathur, Kozhikode

**Beena Stephen**
SPTPM, Govt. UPS
Kuravankonam
Thiruvananthapuram

**Jiji Varghese P**
Trainer, BRC
Edappal

**Premjith V R**
HST Maths, GVHSS
Payyoli, Kozhikode

**Bhagyesh K**
SVMGUPS
Edathodu, Kasaragod

**Anoop K P**
Art teacher
PMSAPTHSS, Kakkov,
Vazhayur, Malappuram

**Shaji C K**
Art teacher
GHSS Naduvannur
Kozhikode

**Deepesh T**
Art teacher
CHMHHS Kavumpadi
Kannur

## Tamil Version

## Experts

**Dr. S. Rajendran**
Professor in Tamil (Rtd), University College,
Thiruvananthapuram

**Dr. G. Santhosh kumar**
Curriculam Committee Member, SCERT

## Members

**Domanatha Sarath Kame**
HST Maths, CPM GHSS
Peermade, Idukki

**R. Russelraj**
HM (Rtd), ALPS Arivikad,
Munnar, Idukki

**C. Manivannan**
PDTr (Rtd) Govt: Tamil LPS,
Chalai, Thiruvananthapuram

**John Elkaiah**
PD Tr (Rtd) Govt: SSLPS
Karamana, Thiruvananthapuram

**Heleena K**
LPST, GHS Vanchivayal,
Idukki

**Jasmin Banu S**
LPST, GHSS Balaramapuram,
Thiruvananthapuram.

---

## Academic Coordinator

**Dr. Selvamari S**
**Research Officer, SCERT**

---

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கோடுகள் வடிவங்கள் | 07 |
| 2. | ஆயிரத்திற்கு மேல் | 19 |
| 3. | எத்தனை எத்தனை எண்கள் | 35 |
| 4. | கூடும் கூட்டம் | 47 |
| 5. | நேரமாச்சு | 63 |
| 6. | குறையும் கூட்டம் | 77 |




இப்புத்தகத்தில் "செய்து பார்ப்போம்" என்ற செயல்பாட்டை குறிப்பதற்காக இந்த அடையாளம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

# 1
# கோடுகள் வடிவங்கள்




படத்தைப் பாருங்கள்,
என்னென்ன பார்க்கிறீர்கள்?
நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்...
குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## படத்தைப் பாருங்கள்... வரையுங்கள்...

முன்பக்கத்தில் உள்ள படத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? சுற்றுச் சுவரில் உள்ள படங்களைக் கவனித்தீர்கள் அல்லவா?

அதில் உங்களுக்கு மிகவும் பிடித்த படத்தை வரையுங்கள்...

நான் வரைந்தது

## தினவிழா கொண்டாட்டம்

கடலுகாணி பள்ளிக்கூடத்தில் ஜூன் 8 ஆம் தேதி நடைபெற இருக்கும் தினவிழா எது ?

## வண்ணம் தீட்டுங்கள்

தினவிழா கொண்டாடுவதற்காகப் பள்ளிக்கூடத்தில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனுவும், சுபியும், அதுலும் பள்ளிக்கூடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் அலங்கரிப்பதற்காக காகிதத்தில் பலவிதமான மீன்களை செய்தனர்.





அவர்கள் செய்த காகித மீன்களை கயிற்றில் கட்டி தொங்கவிடப்பட்டுள்ளதைப் பாருங்கள்...



படங்களுக்கு வண்ணம் தீட்டி அழகுபடுத்துங்கள்...

## வரையுங்கள்... வண்ணம் தீட்டுங்கள்...

தரப்பட்டுள்ள வடிவங்களுடன் பிற வடிவங்களைச் சேர்த்து மீன் வரையுங்கள்... வண்ணம் தீட்டுங்கள்...





## பல வடிவங்கள்

காகித மீன்களில் பார்த்த வடிவங்கள் எவை?

உங்களுக்குத் தெரிந்த வடிவங்களை வரைந்து அட்டவணையை நிரப்புங்கள்.



| வடிவம் | பெயர் |
|---|---|
|  | |
| | |
| | |

## ஈர்க்கில் மீன்






ஈர்க்கில் குச்சிகளை காகிதத்தில் ஒட்டி அதுல் தயாரித்த மீன் படத்தில் உள்ளது. இதுபோன்ற வடிவங்களை நீங்கள் தயாரித்து தினவிழாக் கொண்டாட்டங்களுக்குப் பயன்படுத்தவும்...

## பட்டாம்பூச்சி

தினவிழா கொண்டாட்டத்திற்கு பள்ளிக்கூடமும் வகுப்பறையும் அலங்கரிக்க வேண்டும். அதற்காக புதிய வடிவங்கள் வரையலாம்.

பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்தி வரைந்த பட்டாம்பூச்சியின் படத்தைப் பாருங்கள். வண்ணம் தீட்டி பட்டாம்பூச்சியை அழகுபடுத்துங்கள்.



பட்டாம்பூச்சியில் என்னென்ன வடிவங்கள் உள்ளன என எழுதுங்கள்.

**புதிர்—மூலை**

என்னை உருவாக்க மூன்று கோடுகள் போதும் நான் யார்?

## பக்கங்களை அளக்கலாம்

கணக்குப் பெட்டியில் உள்ள ஒரு செவ்வக அட்டையைப் பயன்படுத்தி செவ்வகம் வரையுங்கள்.

நான் வரைந்தது

செவ்வகத்தில் எத்தனை பக்கங்கள் உள்ளன? ______________

செவ்வகத்தில் எத்தனை மூலைகள் (உச்சிகள்) உள்ளன? __________

நீங்கள் வரைந்த செவ்வகத்தின் பக்கங்களின் நீளத்தை அளவுகோல் (Scale) பயன்படுத்தி அளந்து எழுதுங்கள்.

| பக்கம் 1 | பக்கம் 2 | பக்கம் 3 | பக்கம் 4 |
|---|---|---|---|
| .................. சென்டிமீட்டர் | .................. சென்டிமீட்டர் | .................. சென்டிமீட்டர் | .................. சென்டிமீட்டர் |

ஏதேனும் சிறப்புகள் உள்ளனவா? நீங்கள் கண்டு பிடித்ததை எழுதுங்கள்...

நான் கண்டறிந்தவை

## ஈர்க்கில் செவ்வகம்

5 சென்டிமீட்டர், 8 சென்டிமீட்டர் நீளமுள்ள இரண்டு ஈர்க்கில் குச்சிகளைப் பயன்படுத்தி அதுலும், பின்சாவும் உருவாக்கிய வடிவங்களைப் பாருங்கள்.



அதுல்





பின்சா



செவ்வக வடிவத்தை உருவாக்கியது யார்?

அதுல் உருவாக்கிய செவ்வகத்தின் இடது, வலது பக்கங்கள் செங்குத்தாகும்.

பின்சா உருவாக்கிய வடிவம் செவ்வகமல்ல. எதனால்?

**நான் கண்டறிந்தவை**

## செவ்வகத்தின் பண்புகள்

செவ்வகத்தின் பண்புகளை எழுதுங்கள்...

- செவ்வகத்திற்கு 4 பக்கங்கள் உள்ளன.
- மேலும் கீழும் உள்ள பக்கங்கள் கிடைமட்டமாகவும் இடது, வலது பக்கங்கள் செங்குத்தாகவும் உள்ளன.
- 

## செவ்வகம் பலவகை

கணக்குப்பெட்டியில் உள்ள செவ்வக அட்டைகளைப் பயன்படுத்தி அனூப் வரைந்த செவ்வகங்கள் கீழே தரப்பட்டுள்ளன.






செவ்வகம் 1




செவ்வகம் 2




செவ்வகம் 3




செவ்வகம் 4

அளவுகோல் பயன்படுத்தி பக்கங்களை அளந்து அட்டவணையை நிரப்புங்கள்.

| செவ்வகம் | பக்கம் 1 (செ.மீ.) | பக்கம் 2 (செ.மீ.) | பக்கம் 3 (செ.மீ.) | பக்கம் 4 (செ.மீ.) |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |

அளவுகளின் சிறப்பியல்புகள் என்ன?

**நான் கண்டறிந்தவை**

## மற்றொரு செவ்வகம்

பலவித செவ்வகங்களைப் பார்த்தீர்கள் அல்லவா? அதில் மூன்றாவதும் நான்காவதும் உள்ள செவ்வகங்களைப் பாருங்கள்.




**புதிர் மூலை**

**எத்தனை மூலைகள் ?**

செவ்வக வடிவத்திலுள்ள காகிதத்தின் ஒரு மூலையை வெட்டிஎடுக்கவும். இப்போது காகிதத்தில் எத்தனை மூலைகள் உள்ளன?

நீங்கள் எடுத்த ஈர்க்கில் குச்சிகளினுடைய நீளத்தின் சிறப்பியல்புகள் என்ன?

சதுரத்தின் பண்புகளை எழுதுங்கள்...

**நான் கண்டறிந்தவை**

- 4 பக்கங்கள் உள்ளன
- 
- 
- 

**சதுரம்**

நான்கு பக்கங்களும் ஒரே நீளமுள்ள செவ்வகமே சதுரம்.

எல்லா சதுரமும் செவ்வகமாகும். ஆனால் எல்லா செவ்வகமும் சதுரம் அல்ல.

## செவ்வகத்திற்குள் சதுரம்

இந்த செவ்வகத்தினுள் ஒரு கோடு மட்டும் வரைந்து சதுரம் வரையுங்கள்.

## கனசதுரக் கட்டை உருவாக்கலாம்

படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று சதுரங்களை கட்டியான அட்டையில் வரைந்து வெட்டியெடுக்கவும். ஆசிரியையின் உதவியுடன் கனசதுரக்கட்டை உருவாக்கவும்.





## ஜியோபோர்டு

கணித ஆய்வகத்தில் உள்ள ஜியோ போர்டில் இரப்பர்பேண்டை பயன்படுத்தி செவ்வகங்களும் சதுரங்களும் உருவாக்கி அவற்றின் பக்கங்களின் அளவுகளைக் கண்டுபிடியுங்கள்.

ஓர் ஆணியுடன் அதன் மிகவும் அருகிலுள்ள 3 ஆணிகளையும் சேர்த்து இரப்பர்பேண்டு சுற்றினால் கிடைக்கும் வடிவம் என்ன?



______________________

## கணித மன்றம்

கணித மன்றத்தின் துவக்க விழாவிற்காக நண்பர்கள் வகுப்பறையை அலங்கரித்திருப்பதைப் பாருங்கள்...



**இதில் என்னென்ன வடிவங்கள் உள்ளன?**

அலங்கரிப்பதற்காக அவர்கள் பயன்படுத்திய சில வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வடிவங்களின் கீழே அவற்றின் பெயர்களை எழுதுங்கள்.



## கண்டுபிடிக்கலாம்

சுற்றுப்புறத்தில் காணப்படும் உங்களுக்குத் தெரிந்த பொருட்களை வடிவங்களின் அடிப்படையில் பட்டியலிடுங்கள். பொருட்களின் பெயர்களை எழுதுங்கள்.

| கன செவ்வகம் | கோளம் | கன சதுரம் | வட்டக்கூம்பு |
|---|---|---|---|
| | | | |

## புதிர்வெட்டு துண்டுகள் (டான்கிராம்)

படத்திலுள்ள பல்வேறு வடிவங்களைச் சேர்த்து வைத்த படங்கள் பாடபுத்தகத்தின் பின்புற அட்டையில் உள்ளது. புதிர்வெட்டு துண்டுகளிலுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி புதிய படங்களை உருவாக்குங்கள்.



1. கீழே தரப்பட்டுள்ள படங்களில் செவ்வகத்திற்கு (✓) அடையாளம் இடவும். சதுரத்திற்கு சிவப்பு நிறம் கொடுக்கவும்.



2. மனு வாழ்த்து அட்டை தயாரித்தான். பக்கங்களின் நீளம் 8 சென்டிமீட்டர் வீதம் வருகின்ற ஒரு சதுர அட்டையின் 4 பக்கங்களிலும் கம்பளி நூல் ஒட்டினான். எத்தனை சென்டிமீட்டர் நீளமுள்ள கம்பளி நூலை மனு பயன்படுத்தினான்?

3. செவ்வக அட்டை பயன்படுத்தி நோட்டுப்புத்தகத்தில் ஒரு செவ்வகம் வரையவும். அதன் சிறிய பக்கத்துடன் சேர்ந்து வருகின்ற ஒரு சதுரமும் அதன் பெரிய பக்கத்துடன் சேர்ந்து வருகின்ற மற்றொரு சதுரமும் அளவுகோல் பயன்படுத்தி வரையவும். அதன் பக்கங்களின் நீளத்தை அளந்து எழுதவும்.

4. சில வடிவங்களினுடைய பக்கங்களின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் செவ்வகம் வரைய இயலுகின்ற அளவு எது?

A) 5, 8, 6, 7  B) 5, 6, 7, 9  C) 5, 8, 5, 8  D) 8, 8, 5, 8

5. கீழே தரப்பட்டுள்ள அளவுகளில் சதுரம் வரைய இயலாத அளவு எது?

A) பக்கங்களின் நீளம் 8 வீதம்  B) 5, 5, 5, 5

C) 4 பக்கமும் 6 வீதம்  D) 5, 5, 6, 6

6.



__________ தொடர்ந்து வரும் படம் எது?



(A)  (B)  (C)  (D)

# 2

# ஆயிரத்திற்கு மேல்



கார் பந்தயம்
போட்டி நடைபெறுகிறது.
முதலாவது செல்வது டோட்டோ கார் அதன் எண்ணைப் பார்த்தாயா?
700
800
900
1000
1000

## எண்களின் தொடர்பைக் கண்டுபிடியுங்கள்...

எண் தொடர்பைக் கண்டுபிடித்து காலியான கட்டங்களில் எண்களை எழுதுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 100 | ........ | 199 | ........ | 500 | ........ | 909 | ........ | 999 |
| 10 | 101 | 110 | ........ | 280 | ........ | 667 | ........ | 990 | ........ |

## டோட்டோ காருக்கு வண்ணம் தீட்டுங்கள்...

நீங்கள் எழுதிய எண்களைக் கீழே தரப்பட்டுள்ள படத்திலிருந்து கண்டுபிடியுங்கள். அவற்றிற்கு வண்ணம் தீட்டுங்கள்...




## நம்பர் பிளேட் (வாகனப் பதிவெண் பலகை)

இவர்கள் டோட்டோ காரின் நண்பர்கள். குறிப்புகளிலிருந்து எண்களைக் கணக்கிட்டு நம்பர் பிளேட்டுகளில் எழுதுங்கள்.

8 நூறு
4 பத்து
2 ஒன்று



910 இல் ஒன்று குறைந்தது



மிகப்பெரிய மூன்றிலக்க எண்



மிகப்பெரிய இரண்டிலக்க எண்ணுடன் ஒன்றை கூட்டியது



## அம்மாடியோ... ஆயிரம்

எனது எண்ணை வாசியுங்கள்




எனது எண் மிகச்சிறிய நான்கிலக்க எண்ணாகும்.

## வரைந்து இணையுங்கள்

மனக்கணக்காக செய்யுங்கள்.

எந்தெந்த வாகனங்களின் எண்களைக் கூட்டினால் டோட்டோ காரின் எண் கிடைக்கும்? வரைந்து இணையுங்கள்...


505 250



999 100



750 1



990 495



900 10


## மேலும் ஒன்றைச் சேர்த்தால்




மணிச்சட்டத்தில் உள்ள எண் எது? ____________

மேலும் ஒன்றைச் சேர்த்தால்? ____________

இந்த எண்ணை மணிச்சட்டத்தில் வரையுங்கள்...




**புதிர் மூலை**

**நான் யார்?**

நான் மணிச்சட்டத்தில் ஒரு முத்து. மிகப்பெரிய மூன்று இலக்க எண்ணைவிடப் பெரியவன், நான் யார்? மணிச்சட்டத்தில் எனது இடம் எது?

## பெட்ரோல் பங்க்

கார் பந்தய போட்டியில் பங்கெடுக்கும் கார்கள் ஒவ்வொன்றும் 1000 ரூபாய்க்கு பெட்ரோல் நிறைத்தன.






டோட்டா கார் 100 ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தது. எத்தனை நோட்டுகள்?

____________




டோமோ கார் 10 ரூபாய் நோட்டுகளின் ஒரு கட்டைக் கொடுத்தது. எத்தனை நோட்டுகள்?

____________



பக்கி கார் ஒரு ரூபாய் நாணயங்களைக் கொடுத்தது. எத்தனை நாணயங்கள்?

____________

## கார் பந்தயம்




பந்தய சுற்றுப்பாதையில் கார்களின் போட்டி நடைபெறுகின்றது. ஒரு சுற்று முடிந்தால் 1000 புள்ளிகள் கிடைக்கும்.

ஒவ்வொரு காரும் நிறைவு செய்த சுற்றுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. புள்ளிகளைக் கணக்கிடவும்.

| காரின் பெயர் | சுற்று | புள்ளிகள் |
|---|---|---|
|  மிக்கி | 1 | |
|  ஸ்கைபி | 5 | |
|  பக்கி | 3 | |
|  ஆல்பா | 6 | |
|  டோமோ | 7 | |
|  ப்ளோரா | 4 | 4000 |
|  பிரெடி | 8 | |
|  ஸ்பீடி | 9 | |
|  டோட்டோ | 10 | |
|  போணி | 2 | |

கிடைத்த புள்ளிகளின் அடிப்படையில் கார்களை வரிசைப்படுத்தி குறிப்பேட்டில் எழுதுங்கள். எவ்வாறெல்லாம் வரிசைப்படுத்தலாம்?

## படிக்கட்டுகள் ஏறலாம்

படிக்கட்டிலுள்ள எண்களை எழுதுங்கள்.







ஸ்கைபி காருக்கு கிடைத்த புள்ளிகளை மணிச்சட்டத்தில் வரையவும்.




ஐந்து ஆயிரங்கள் சேர்ந்தால் ஐந்தாயிரம் என்று கூறுவோம்

ஸ்பீடி காருக்கு கிடைத்த புள்ளிகளை மணிச்சட்டத்தில் வரையவும்.




ஒன்பது ஆயிரங்கள் சேர்ந்தால் ஒன்பதாயிரம்

10 ஆயிரங்கள் சேர்ந்தால்
பத்தாயிரம் என்றும் கூறுவர்

20 ஆயிரம் சேரும்போது?

______________

## பிற தொகைகளை எழுதுங்கள்.

| பத்து (10) | நூறு (100) | ஆயிரம் (1000) | பத்தாயிரம் (10000) |
|---|---|---|---|
| 5 + 5 | 50 + 50 | 500 + 500 | 5000 + 5000 |
| 6 + 4 | | | |
| 7 + 3 | | | |
| | 80 + 20 | | |
| | | | |

## ஸ்பீடோ மீட்டர் (வேகமானி)

கார்பந்தயம் தொடங்குவதற்கு முன் டோட்டோ 1000 கிலோமீட்டர் ஓடியது. பந்தயத்தில் ஒரு சுற்று ஒரு கிலோமீட்டர் ஆகும்.




## அட்டவணையை நிரப்புங்கள்.

| சுற்று | ஸ்பீடோமீட்டர் |
|---|---|
| 1 | 1000 + 1 = 1001 |
| 2 | 1000 + 2 = 1002 |
| ................ | ........................... |
| ................ | ........................... |
| ................ | ........................... |
| ................ | ........................... |
| ................ | ........................... |

11 சுற்றுகள் ஓடிய பின் ஸ்பீடோமீட்டரில் எண்?

______________

15 சுற்றுகளுக்குப் பிறகு?

______________

25 சுற்றுகளுக்குப் பிறகு?

______________

## எழுதலாம்... வரையலாம்... வாசிக்கலாம்...

| | | | | |
|---|---|---|---|---|
|  ஆயிரம் ஒன்று | 1000 உம் 1 உம் | 1 0 0 0 / 1 / 1 0 0 1 | ஆயிரத்து ஒன்று 1001 | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் இரண்டு | 1000 உம் 2 உம் | | ஆயிரத்து இரண்டு 1002 | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் நான்கு | | | | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் ஆறு | | | | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் ஐந்து | | | | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் ஒன்பது | | | | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் ஏழு | | | | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் எட்டு | | | | ஆ நூ ப ஒ |
|  ஆயிரம் பத்து | | | | ஆ நூ ப ஒ |

*ஆ–ஆயிரங்கள், நூ–நூறுகள், ப–பத்துகள், ஒ–ஒன்றுகள்*

## ஆயிரத்துடன் சேரும்போது

| | | | |
|---|---|---|---|
| 1000 + 100 | 1000<br>100 | 1100 | ஆயிரத்து நூறு |
| 1000 + 10 | 1000<br>10 | 1010 | ஆயிரத்து பத்து |

| | | | |
|---|---|---|---|
| 2000 + 200 | | | |
| 3000 + 40 | | | |
| 3000 + 5 | | | |

| | | | |
|---|---|---|---|
| 1000 + 300 + 30 | | | ஆயிரத்து முந்நூற்றி முப்பது |
| 5000 + 30 + 3 | | | |
| 8000 + 300 + 3 | | | |
| 6000 + 700 + 40 + 8 | | | |

1000 முதல் 1200 வரை எத்தனை எண்கள் உள்ளன?

## எண்ணிலும் எழுத்திலும் எழுதுங்கள்...

| எண்ணில் | எழுத்தில் |
|---|---|
| 5250 | |
| | ஏழாயிரத்து எழுநூற்றி ஏழு |
| 9018 | |
| | ஒன்பதாயிரத்து ஒன்பது |

## எண்அட்டைகள்

எண் அட்டைகளைப் பாருங்கள். அவற்றை பயன்படுத்தி உருவாக்கக்கூடிய நான்கிலக்க எண்களை எழுதுங்கள்...

**3** **5** **8** **1**

5–இல் தொடங்கும் எண்கள் எத்தனை? ______________

பத்தின் இடத்தில் 8 வரக்கூடிய எண்கள் எத்தனை? ______________

எண்களைச் சிறியதிலிருந்து பெரியதுவரை என்ற வரிசையில் குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## எண்களை வாசிக்கலாமா?

கார்பந்தயத்தில் பங்கெடுக்கும் ஸ்பீடி காரின் பதிவு எண் சகதியால் மறைந்துள்ளது.

இப்போது தெரியும் எண்




சிறிது இடம் சுத்தம் செய்த போது




கூடுதல் இடம் சுத்தம் செய்த போது




இன்னும் சிறிது சுத்தம் செய்த போது




**என்ன அழகு!**

9 + 1 = 10

99 + 1 = ...............

999 + 1 = ...............

9999 + 1 = ...............

## மட் ரேஸ் (சேற்றில் கார் பந்தயம்)

நண்பர்களுடன் சேர்ந்து மட் ரேஸ் விளையாடுங்கள்... 100, 200, ..., 600 வரை எழுதிய பகடையை (டைஸ்) பயன்படுத்தி விளையாடுங்கள். பகடை விழும் போது அதன் மேலே காணப்படும் எண்களுக்கு ஏற்ப காரை நகர்த்தவும். பாலம் வந்தால் பாலத்தில் ஏறி முன்னேறிச் செல்லலாம். குழியில் விழுந்தால் பின்புறமாகத் திரும்பிச் செல்ல வேண்டும். முதலில் 11000 த்தை அடைபவர் வெற்றி பெறுவர்.












## பரிசு



கார் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றதற்காக டோட்டோவுக்கு பரிசுக்கோப்பையுடன் பணப்பரிசும் கிடைத்தது. பரிசுத்தொகை காசோலையாக வழங்கப்பட்டது. காசோலையில் எழுதப்பட்டுள்ள தொகையை எண்ணில் எழுதவும்.

திருவனந்தபுரம் கிளை
திருவனந்தபுரம் 695 011
IFSC KSC0001234

| 0 | 8 | 0 | 7 | 2 | 0 | 2 | 5 |
|---|---|---|---|---|---|---|---|

நாள்/ மாதம்/ வருடம்

Pay டோட்டோ

Rupees ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது

₹ ................

Account No. **KSC 0000320237**

இதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் மூன்று மாதம் வரை இந்தக் காசோலைக்கு காலக்கெடு உள்ளது.

கையொப்பம்

⑈322401⑈ 673009032⑆ 000611⑈ 31

## பயணித்த தூரம்...



ஒவ்வொருகாரும் பயணித்த தூரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| எண் | கார் | தூரம் (கிலோமீட்டர்) |
|---|---|---|
| 1 | மிக்கி | 8546 |
| 2 | போணி | 7982 |
| 3 | ஸ்பீடி | 6375 |

| எண் | கார் | தூரம் (கிலோமீட்டர்) |
|---|---|---|
| 4 | பிரெடி | 5114 |
| 5 | ஃப்ளோரா | 6735 |
| 6 | டோட்டோ | 8564 |

பயணித்த தூரத்திற்கு ஏற்ப அட்டவணைபடுத்துங்கள். நீண்ட தூரம் பயணித்த கார் முதலிலும் குறைந்த தூரம் பயணித்த கார் கடைசியாக வருமாறு எழுதவும்.

| எண் | காரின் பெயர் | தூரம் (கிலோமீட்டர்) | |
|---|---|---|---|
| | | எண்ணில் | எழுத்தில் |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## பக்கி கார் எண்

மணிச்சட்டத்தில் ஆயிரத்தின் இடத்திலிருந்து ஒரு முத்தை எடுத்து 1 இன் இடத்தில் போடவும். இப்போது கிடைத்த எண் எது?

ஆயிரம் குறைந்து 1 கூடியது

______________

மணிச்சட்டத்தில் முதலில் இருந்த எண்ணுக்கும் இப்போது கிடைத்த எண்ணுக்கும் இடையேயான வித்தியாசம் தான் பக்கி கார் எண்.

எண் எது? ______________




## ஒன்று கூட சேர்த்தால்




மணிச்சட்டத்தில் உள்ள எண் எது? ________

இதனுடன் ஒன்றைக் கூட்டினால் கிடைக்கும் எண் எது? ________

## டோமோ கார் பணிமனையில்



- கார் பந்தயத்திற்கு பிறகு ஏற்பட்ட பழுதுகளைச் சரி செய்வதற்காக டோமோகாரை பணிமனைக்குக் கொண்டு சென்றனர். மின்கலம் (பாட்டரி) மாற்ற 3500 ரூபாயும் இயந்திர (இன்ஜின்) வேலைக்கு 2500 ரூபாயும் வண்ணம் பூசுவதற்கு (பெயிண்டிங்) 4000 ரூபாயும் செலவானது. செலவான தொகை எவ்வளவு?

| கேள்வியை வாசித்து நான் புரிந்து கொண்டவை |
|---|
| |

மொத்தம் செலவான தொகை ______________

## பயணம் செய்யலாம்

டோட்டா கார் அகில இந்திய சுற்றுப்பயணத்திற்கு தயாரானது. அதன் 4 சக்கரங்களை மாற்ற வேண்டும். ஒரு சக்கரத்தின் (டயர்) விலை 2500 ரூபாய் எனில் மொத்தம் எத்தனை ரூபாய் தேவை?

- அகில இந்திய சுற்றுப் பயணத்தின் போது போணி மின்சாரகார் சார்ஜ் செய்வதற்காகக் கொடுத்த தொகை கீழே தரப்பட்டுள்ளது. கார் சார்ஜ் செய்வதற்கு செலவான தொகையைக் கணக்கிடவும்

| 1 | 2 | 3 |
|---|---|---|
| **3500** ரூபாய் | **2000** ரூபாய் | **3000** ரூபாய் |

**நான் கண்டறிந்த முறை**

## எண் தொடர் எழுதுங்கள்...

1. 500, 1000, 1500, .........., .........., .........., .........., .........., ..........
2. 4000, 6000, 8000, .........., .........., .........., .........., .........., ..........
3. 7628, 7728, 7828, .........., .........., .........., .........., .........., ..........
4. 2222, 3333, 4444, .........., .........., .........., .........., .........., ..........
5. 9400, 9300, 9200, .........., .........., .........., .........., .........., ..........
6. 3021, 4132, 5243, .........., .........., .........., .........., .........., ..........

## எனது எண் தொடர் அமைப்புகள்

- ............, ............, ............, ............, ............
- ............, ............, ............, ............, ............
- ............, ............, ............, ............, ............
- ............, ............, ............, ............, ............

1. கார்பந்தயத்தில் பங்குபெறும் கார்களுக்கு போட்டி நடத்தும் அமைப்பினர் பதிவு எண்களை வழங்கினர். 5000 முதல் 5050 வரையுள்ள எண்களை வழங்கினர், போட்டியில் எத்தனை கார்கள் பங்கெடுத்தன?
2. 5, 4, 0, 7 என்ற எண்களைப் பயன்படுத்தி நான்கிலக்க எண்கள் எழுதவும். எத்தனை எண்கள் எழுத இயலும். அவற்றுள் மிகப்பெரிய நான்கிலக்க எண்ணை மணிச்சட்டத்தில் வரையவும். அந்த எண்ணை எழுத்தில் எழுதவும்.
3. 9999 ற்கும் 10100 ற்கும் இடையே உள்ள ஒன்றின் இடத்தில் பூஜ்ஜியம் வருகின்ற எல்லா எண்களையும் எழுதுங்கள்.
4. எண் தொடரை நிரப்புங்கள்.

   (A) 10150, 10200, 10250, .........., .........., .........., .........., ..........

   (B) 1500, 2600, 3700, .........., .........., .........., .........., ..........

   (C) 14500, 15250, 16000, .........., .........., .........., .........., ..........

5. நான் யார்?
   - 4000 ற்கும் 5000 ற்கும் இடையிலுள்ள எண் ஆகும்.
   - ஆயிரத்தின் இடத்திலுள்ள எண்ணின் இரண்டு மடங்கு ஆகும் ஒன்றாம் இடத்திலுள்ள எண்.
   - ஆயிரத்தின் இடத்திலுள்ள எண்ணின் பகுதி தான் பத்தின் இடத்தில் உள்ள எண்.
   - இலக்கங்களைக் கூட்டினால் கிடைக்கும் தொகை 19 ஆகும். எண்கள் எவை?

6. எண்களைக் கண்டுபிடிக்கவும்

- 9999 என்ற எண்ணிலிருந்து 1000 வீதம் கழிக்கும் போது 8-வது வரும் எண் எது ?
- 100 வீதம் குறைகிறது எனில் ஐந்தாவது வரும் எண் எது?

இதைப்போன்று ஒரு கேள்வி தயாரித்து நண்பர்களுடன் பகிருங்கள்.

7. 1000 ற்கும் 1100 ற்கும் இடையில் பூஜ்யத்தில் முடியும் எத்தனை எண்கள் உள்ளன?

8. 1 முதல் 50 வரை உள்ள எண்களை எழுதும் போது 2 எத்தனை முறை எழுத வேண்டும்?

- 100 வரை எழுதினால்?
- 2 ற்கு பதிலாக 3 எழுதினால் கிடைப்பது ஒரே எண்ணிக்கை தானா?

## தேடல்

- 1, 2 என்ற எண்களைப் பயன்படுத்தி (ஒரே எண் மீண்டும் மீண்டும் வராமல்) எழுத இயலுகின்ற எல்லா இரண்டிலக்க எண்களையும் எழுதவும். எண்களின் எண்ணிக்கையை எழுதவும்.
- 1, 2, 3 என்ற எண்களைப் பயன்படுத்தி (எண்கள் மீண்டும் மீண்டும் வராமல்) எழுத இயலுகின்ற எல்லா மூன்று இலக்க எண்களையும் எழுதவும். எண்களின் எண்ணிக்கையை எழுதவும்.
- 1, 2, 3, 4 என்ற எண்களைப்பயன்படுத்தி (எண்கள் மீண்டும் மீண்டும் வராமல்) எழுத இயலுகின்ற எல்லா நான்கிலக்க எண்களையும் எழுதவும். எண்களின் எண்ணிக்கையை எழுதவும்.
- கண்டறிந்தவற்றை குறிப்பேட்டில் எழுதுங்கள்.

# 3
# எத்தனை எத்தனை எண்கள்



இன்று மித்ராவும் நண்பர்களும் ரயிலில் பயணம் செய்து எர்ணாகுளத்திற்கு கல்விச் சுற்றுலா செல்கின்றனர்.

## ரயில் நிலையத்தில்...

ரயில் பயணத்தின் போது பயணச்சீட்டு வாங்குவதற்காக கொடுத்த ரூபாய் நோட்டுகளையும் நாணயங்களையும் பாருங்கள்.

மொத்தம் எத்தனை ரூபாய் கொடுத்தனர்?















மொத்த ரூபாய்

## சுற்றுலா மையத்திற்கு

ரயில் நிலையத்தில் உள்ள ஓர் அறிவிப்பு பலகையைப் பாருங்கள். இதில், எர்ணாகுளத்திலிருந்து இந்தியாவின் பல்வேறு சுற்றுலா மையங்களுக்கான தூரம் எழுதப்பட்டுள்ளது.

| இடம் | தூரம் |
|---|---|
| ஹில் அரண்மனை | 11 கி.மீ. |
| கோவா | 744 கி.மீ. |
| மைசூர் | 385 கி.மீ. |
| கன்னியாகுமரி | 307 கி.மீ. |
| ஹைதராபாத் திரைப்பட நகர் | 1112 கி.மீ. |
| செங்கோட்டை | 2592 கி.மீ. |
| தாஜ்மஹால் | 2424 கி.மீ. |



மிகத் தொலைவிலுள்ள சுற்றுலா மையம் எது? ________________

மிக அருகிலுள்ள சுற்றுலா மையம் எது? ________________

மிகவும் தொலைவிலிருந்து மிகவும் அருகிலுள்ளவை என்ற முறையில் வரிசையாக எழுதுங்கள்.

| இடம் | தூரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## அரண்மனையில்




அரண்மனைக்குள் செல்வதற்காக குழந்தைகள் வரிசையாக நிற்கின்றனர். அவர்களின் நுழைவுச்சீட்டில் உள்ள எண்கள் தொடர்ச்சியானவை. முதலாவது நிற்கும் மித்ராவின் எண் 2986. சாந்திராவின் எண் 3010.

- வரிசையில் மித்ரா முதல் சாந்திரா வரை எத்தனை பேர் உள்ளனர்?

  ____________

- சாந்திராவின் முன் நிற்கும் இஷாவின் எண் எது? ____________

- 3010 ற்கு முன்னால் மற்றும் பின்னால் நிற்பவர்களின் எண்களை எழுதுங்கள். ____________ , ____________

- 3010 ற்குப் பின்னால் உள்ள எண்ணில் இருந்து 20-வது நுழைவுச்சீட்டு எண் எது? ____________

- வரிசையில் 15-வது நிற்கின்ற மஜுவின் எண் எது ? ____________

- 2986 முதல் 3010 வரையுள்ள எண்களைத் தொடர்ச்சியாக எழுதுங்கள்.

## வாட்டர் மெட்ரோ

அரண்மனையை பார்த்தபின் குழந்தைகள் வாட்டர் மெட்ரோவில் ஏறினர்.



வாட்டர் மெட்ரோவில் பயணித்தவர்களுக்கு உணவுச்சீட்டு கிடைத்தது. மித்ராவின் குழுவிற்கு கிடைத்த உணவுச் சீட்டிலுள்ள எண் 8000 ற்கும் 9000 ற்கும் இடையிலாகும். அந்த எண்களின் கூட்டுத்தொகை 10 ஆகும். மித்ராவுக்கும் நண்பர்களுக்கும் கிடைத்த உணவுச்சீட்டின் எண்களை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| | | |
| | | |

### இலக்கங்களின் கூட்டுத் தொகை

7000 ற்கும் 8000 ற்கும் இடையே உள்ள எண்களினுடைய இலக்கங்களின் கூட்டுத் தொகை 10 வருகின்ற எத்தனை எண்கள் உள்ளன? குறிப்பேட்டில் எழுதுங்கள்.

### புதிர் மூலை

$$\begin{array}{r} AAB + \\ A \\ \hline BCCC \end{array}$$

A = .............

B = .............

C = .............



## கண்காட்சி நகரத்தில்

குழந்தைகளின் பூங்காவில் கண்காட்சி காண்பதற்கு வருகின்றவர்களுக்கு பரிசுசீட்டு வழங்கப்படும். இப்பரிசு குலுக்கல் மூலம் தேர்வு செய்யப்படும்.

குழந்தைகள் அனைவரும் பரிசுச்சீட்டுடன் திரையில் காட்டும் எண்ணிற்காக திரைக்கு முன்னால் காத்து நின்றனர்.

சுழன்று கொண்டிருக்கும் சக்கரம் நிற்கும் இடத்தில் காணும் எண்ணை எழுதவும்.

| | | |
|---|---|---|
|  | 10000 | பத்தாயிரம் |
|  | 11000 | ................ |
|  | ................ | ................ |
|  | ................ | ................ |

இலக்கங்களின் தொகை 5 ஆக இருந்தால் பரிசு

பரிசு கிடைத்த எண்

______________

### எத்தனை நான்கிலக்க எண்கள்?

9, 0 என்ற எண்களை மட்டும் பயன்படுத்தி எத்தனை நான்கிலக்க எண்கள் உருவாக்கலாம்? அவை எவை?




அவற்றை பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரை எழுதுங்கள்.

## எண்கள்

முதலில் உள்ள எண்களைப் போல பிற எண்களையும் எழுதுங்கள்.

- 5 ஆயிரங்கள் 4 நூறுகள் 3 பத்துகள் 2 ஒன்றுகள் - 5432
  54 நூறுகள் 32 ஒன்றுகள் - ..................
  543 பத்துகள் 2 ஒன்றுகள் - ..................
  5432 ஒன்றுகள் - ..................
- 82 நூறுகள் - ..................
  820 பத்துகள் - ..................
  8200 ஒன்றுகள் - ..................
- 7104
  - ........ ஆயிரங்கள் ........ நூறுகள் ........ பத்துகள் ........ ஒன்றுகள்
  - ........ நூறுகள் ........ ஒன்றுகள்
  - ........ ஆயிரங்கள் ....... ஒன்றுகள்
  - ........ நூறுகள் ........ ஒன்றுகள்

## எண்சக்கரம்

சக்கரத்தை நிரப்புங்கள்.



## எண்களைப் பிரித்து எழுதுவோம்

எத்தனை ஒன்றுகள்?

எத்தனை பத்துகள்?

எத்தனை நூறுகள்?




கீழே கொடுக்கப்பட்டுள்ளதையும் இதைப் போன்று நிரப்புங்கள்.







**புதிர் மூலை**

நான்யார்?

6 நூறுகள்
6 பத்துகள்
6 ஆயிரங்கள்
6 ஒன்றுகள்

### எர்ணாகுளம் – அமிர்தசரஸ் பயணம்

எர்ணாகுளத்திலிருந்து அமிர்தசரஸ் வரை செல்லும் ரயில் நிற்கும் நிலையங்களும் அவற்றின் தூரமும் கீழே தரப்பட்டுள்ளது. அட்டவணையைப் பார்த்து எர்ணாகுளத்திலிருந்து புறப்படும் ரயில் முதலில் நிற்கும் நிலையம் எது என எழுதுக. தொடர்ந்து நிற்கும் பிற நிலையங்களும் அவற்றின் தூரமும் எழுதுங்கள்.

| நிலையம் | தூரம் |
|---|---|
| காசர்கோடு | 368 கி.மீ. |
| மங்களூர் | 415 கி.மீ. |
| கோழிக்கோடு | 193 கி.மீ. |
| அமிர்தசரஸ் | 3092 கி.மீ. |
| சூரத் | 1522 கி.மீ. |
| புதுடில்லி | 2643 கி.மீ. |
| லூதியானா | 2956 கி.மீ. |

| நிலையம் | தூரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## எண் தொடரை தொடர்ந்து எழுதுங்கள்.

- 10050, 10051, 10052, ..............., ..............., ...............
- 11085, 11086, 11087, ..............., ..............., ...............
- 19995, 19996, 19997, ..............., ..............., ...............
- 12320, 12340, 12360, ..............., ..............., ...............

**நான் கண்டறிந்தது**

## விமானத்திற்கு

சுற்றுலாப்பயணம் முடித்து குழந்தைகள் வீடு திரும்புவது விமானத்திலாகும். விமான நிலையத்தில் வருவதும் போவதுமான விமானங்களின் எண்களைத் திரையில் எழுதிக் காட்டுகிறார்கள்.




விமானத்தின் எண் ஒரு நான்கிலக்க எண்ணாகும்.

ஆயிரம் மற்றும் நூறின் இடத்திலுள்ள எண்கள் சேர்ந்த எண்ணுடைய இருமடங்கு தான் நூறு மற்றும் பத்தின் இடத்திலுள்ள எண்கள் சேர்ந்து வரும் எண்

நூறு மற்றும் பத்தின் இடத்திலுள்ள எண்கள் சேர்ந்த எண்ணின் இரு மடங்குதான் பத்து மற்றும் ஒன்றின் இடத்திலுள்ள எண்கள் சேர்ந்து வரும் எண்.

விமானத்தின் எண்ணை எழுதுங்கள்? ____________

## ரோமன் எண்கள்

கடிகாரத்தைப் பாருங்கள்.







| ரோமன் எண்கள் | | | |
|---|---|---|---|
| I | 1 | VII | 7 |
| II | 2 | VIII | 8 |
| III | 3 | IX | 9 |
| IV | 4 | X | 10 |
| V | 5 | XI | 11 |
| VI | 6 | XII | 12 |

## மணிச்சட்டத்தில் உள்ள எண்கள்






மணிச்சட்டத்தைப் பாருங்கள்.

- இதில் 2 முத்துகளை மட்டும் பயன்படுத்தி உருவாக்க இயலுகின்ற எல்லா ஐந்திலக்க எண்களையும் எழுதுங்கள்.

## எத்தனை நூறுகள்?

- 1 முதல் 5 வரையுள்ள எண்கள் மீண்டும் மீண்டும் வராமல் அவற்றைப் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகப்பெரிய ஐந்திலக்க எண்ணையும் மிகச்சிறிய ஐந்திலக்க எண்ணையும் எழுதுங்கள். ____________
- பெரிய எண்ணில் எத்தனை நூறுகள் ? ____________
- சிறிய எண்ணில் எத்தனை நூறுகள் ? ____________

1. நிரப்புங்கள்.

- **9875** - 9 ஆயிரங்கள், ........... நூறுகள், ........... பத்துகள் , ......... ஒன்றுகள்
- **6307** - ........ ஆயிரங்கள், ............... பத்துகள், ............... ஒன்றுகள்
- **4218** - ................ நூறுகள், ................ ஒன்றுகள்
- ............... - 5 ஆயிரங்கள், 6 நூறுகள், 0 பத்துகள், 8 ஒன்றுகள்
- ............... - 8 ஆயிரங்கள், 12 பத்துகள், 0 ஒன்றுகள்
- ............... - 16 நூறுகள், 25 ஒன்றுகள்

2. 6315 என்ற எண்ணில் 6 என்ற எண்ணின் இட மதிப்பு 6000 ஆகும். கீழே தரப்பட்டுள்ள எண்களில் 3 என்ற எண்ணின் இட மதிப்பை எழுதுங்கள்.

8573 ............................ 7835 ............................

3578 ............................ 5379 ............................

3. திருவனந்தபுரத்திலிருந்து எர்ணாகுளத்திற்கு ரயில் கட்டணம் மொத்தம் 3625 ரூபாய். குழந்தைகளுக்கான சலுகையைக் குறைத்த பின் 2000 ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டது. எனில் சலுகை எவ்வளவு ரூபாய்?

4. விடுபட்ட கட்டங்களில் எண்களை எழுதுங்கள்.




- எண்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தாமல் 8 ஐ சென்றடையவும்.



5. ஒரு வரிசையில் 27 குழந்தைகள் நிற்கிறார்கள், நடுவில் நிற்கின்ற குழந்தையின் பயணச்சீட்டு எண் 4068 எனில் அந்த வரிசையில் நிற்கும் முதல் குழந்தையின் பயணச்சீட்டு எண் என்ன? கடைசியாக நிற்கும் குழந்தையின் பயணச்சீட்டு எண் என்ன?

6. 10 ஆயிரம் சேர்ந்த எண் எத்தனை 500 சேர்ந்த எண்ணிற்குச் சமமாகும்?

7. கீழேதரப்பட்டுள்ளவற்றில் 50 ஒன்றுகள், 50 பத்துகள், 50 நூறுகள் சேர்ந்து வரும் நான்கிலக்க எண் எது?

   (A) 5555 (B) 5505 (C) 5550 (D) 5055

8. எண் தொடரை எழுதுங்கள்.

   4080, 4085, 4091, 4098, ............, ............, ............

9. கணக்கிடவும்

   - 9000 ற்கும் 10000 ற்கும் இடையில் எத்தனை எண்கள் ?

     9000 ற்கும் 9100 ற்கும் இடையில் ........... எண்கள்

     9000 ற்கும் 9500 ற்கும் இடையில் ........... எண்கள்

     9000 ற்கும் 10000 ற்கும் இடையில் ........... எண்கள்
   - 9000 ற்கும் 10000 ற்கும் இடையில் எத்தனை ஒற்றை எண்கள்?
   - 9000 ற்கும் 10000 ற்கும் இடையில் எத்தனை இரட்டை எண்கள்?

## தேடல்

இரண்டு ஒற்றை எண்களை எழுதிக் கூட்டிப் பாருங்கள்...

கிடைக்கின்ற விடை ஒற்றை எண்ணா? இரட்டை எண்ணா?

மூன்று ஒற்றை எண்களைக் கூட்டினாலோ?

கூட்டுகின்ற எண்களின் எண்ணிக்கை ஒற்றை எண் எனில் தொகையாக வரும் எண் எது?

எண்ணிக்கை இரட்டை எண் எனில்?

இதைப் போன்று இரட்டை எண்களைக் கூட்டிப் பாருங்கள்...

கண்டறிந்தவற்றை குறிப்பேட்டில் எழுதுங்கள்...

# 4
# கூடும் கூட்டம்



## வாசலைத் திறக்கலாம்

அப்பா, அம்மாவுடன் சேர்ந்து தொனியும் அவளது தம்பி தனுவும் கிச்சோ பூங்காவிற்குச் சென்றனர்.



## எண் ஜோடிகள்

எண்ஜோடிகளை எழுதலாமா?




## தொகை ஆயிரம்

தொகை ஆயிரம் வருமாறு நிரப்புங்கள்.

490 + 10 + 500 = 1000

490 + .......... = 1000

793 + 7 + .......... = 1000

793 + .......... = 1000

551 + 9 + .......... = 1000

551 + .......... = 1000

800 + 100 + 100 = 1000

700 + 200 + 100 = ..........

600 + 300 + 100 = ..........

500 + 400 + ....... = 1000

400 + 300 + ....... = 1000

600 + ...... + ....... = 1000

400 + ...... + ....... = 1000

500 + .......+ ....... = 1000

எண் மாலையை நிரப்புங்கள்.



## துப்பாக்கி சுடுதல்

துப்பாக்கி சுடுதலில் கிடைத்த புள்ளிகளைக் கணக்கிட்டு வெற்றி பெற்றவர்களைக் கண்டுபிடியுங்கள்...









ஒவ்வொருவருக்கும் கிடைத்த புள்ளிகளை எழுதுங்கள்.

தனு : 100 + 900 + 525 = ____________

தொனி : 750 + 250 + ........ = 1475

மினி மூன்று முறை சுட்டபோது கிடைத்த புள்ளிகள் 1363 ஆகும். எந்தெந்த எண்களில் சுட்டிருப்பாள்?

| 363 | | |
|---|---|---|

சுகைல் மூன்று முறையும் சுட்டது 363இல் ஆகும். கிடைத்த புள்ளிகள் எத்தனை? ____________________




3 ஐ இருமுறை கூட்டினால் 6.
3 ன் இரு மடங்கு 6

### புதிர் மூலை
**நான் யார்?**

நான் ஒரு மூன்றிலக்க எண். எல்லா எண்களும் ஒரே போல் இருக்கும். எண்ணை மூன்று முறை கூட்டி அதனுடன் ஒன்று கூட்டும் போது மிகச் சிறிய நான்கிலக்க எண் கிடைக்கும். நான் யார்?

## இப்படியும் கூட்டலாம்.

- 363 ஐ மூன்று முறை கூட்டுவது எப்படி?

செயல்முறை : 1

300 + 60 + 3 +
300 + 60 + 3
300 + 60 + 3

900 + 180 + 9

900 + 100 + 89 = 1089

செயல்முறை : 2

300 ஐ 3 ஆல் பெருக்கினால்? இது போன்று 60 ஐயும் 3 ஐயும் 3 ஆல் பெருக்கி எழுதலாம்.

300 × 3 = 900 + (3 × 3 × 100 = 900)
60 × 3 = 180 (3 × 6 × 10 = 180)
3 × 3 = 9

1089

- லினி துப்பாக்கியால் சுட்ட போது 363, 475, 750 போன்ற எண்கள் கிடைத்தன. லினிக்கு கிடைத்த புள்ளிகள் எத்தனை?

செயல்முறை:1

363 + 475 + 750
363 + 475 = 300 + 60 + 3 + 400 + 70 + 5
= 300 + 400 + 60 + 70 + 3 + 5
= 700 + 130 + 8
= 830 + 8 = 838
838 + 750 = 800 + 30 + 8 + 700 + 50
= 800 + 700 + 30 + 50 + 8
= 1500 + 80 + 8 = 1588

செயல்முறை:2

363 + 475 + 750

| 300 + 60 + 3<br>400 + 70 + 5<br>700 + 50 | 1400 + 100 + 80 + 8<br>= 1500 + 88<br>= 1588 |
|---|---|
| 1400 +180 + 8 | |

**இவ்வாறும் கணக்கிடலாம்**

363 +
475
838

838 +
750
1588

363 +
475
750
1588

மிகக் கூடுதல் புள்ளிகள் யாருக்கு கிடைத்தது? ______________

வெற்றி பெற்றவரின் பெயர் ______________

குறைந்த புள்ளிகளில் இருந்து கூடுதல் புள்ளிகள் கிடைத்தவர்களின் பெயர்களை வரிசையாக எழுதுங்கள். ________, ________, ________, ________, ________

மூன்று முறை துப்பாக்கியால் சுடும்போது ஒருவருக்கு கிடைக்கும் மிகவும் கூடுதல் புள்ளிகள் எத்தனை? ______________

### 1089 இன் அதிசயம்

- தொடர்ச்சியான ஏதாவது மூன்று எண்களை எழுதவும்.
- இந்த எண்களை உபயோகித்து உருவாக்கக் கூடிய மிகப்பெரிய மூன்றிலக்க எண்ணை எழுதவும் ____________
- மிகச் சிறிய மூன்றிலக்க எண்ணை எழுதவும் ____________
- எண்களின் வித்தியாசங்களை காணவும்.
- வித்தியாசமாகக் கிடைத்த எண்ணை திருப்பி எழுதவும்.
- இரண்டு எண்களையும் கூட்டவும்.

எந்த மூன்று எண்களை எடுத்தாலும் கிடைப்பது இதே விடை தானா? செய்து பாருங்கள்...

## பகடை மூலை (டைஸ்)

பகடையைப் பாருங்கள்

நான்கிலக்க எண்களின் பகடை ஒரு முறையும் மூன்றிலக்க எண்களின் பகடை ஒரு முறையும் உருட்டும் போது கிடைக்கும் எண்களைக் கூட்ட வேண்டும்.

நாம் பகடை விளையாடுவோமா?








தொனி பகடையை உருட்டியபோது கிடைத்த எண்கள்...

| 2349 | 251 |
|---|---|



தொனிக்கு கிடைத்த புள்ளிகள் 2349, 251 என்ற எண்களின் தொகையாகும்.

**தொனிக்குக் கிடைத்த புள்ளிகள்.**

- அப்பா கணக்கிட்ட முறை

$2349 + 251 = 2349 + 1 + 250$
$= 2350 + 250 = 2600$

- அம்மா கணக்கிட்ட முறை

$2349 + 251 = 2000 + 349 + 251$
$= 2000 + 350 + 250$
$= 2600$

- தனு கணக்கிட்ட முறை

$2349 + 251$
$= 2300 + 200 + 49 + 51$
$= 2500 + 100$
$= 2600$

- தொனி கணக்கிட்ட முறை

$2349 + 251 = 2000 + 300 + 40 + 9 + 200 + 50 + 1$
$2000 + 500 + 90 + 10$
$= 2600$

## கூட்டல், கழித்தல்

தனு பகடையை உருட்டியபோது கிடைத்த எண்களைக் கூட்டி எழுதியதைப் பாருங்கள். எந்தெந்த எண்கள் கிடைத்தன.




| | |
|---|---|
| 5013 + .................. | = 5413 |
| .................. + 343 | = 3445 |
| ................ + ................ | = 4850 |

| பகடை 1 | பகடை 2 | தொகை |
|---|---|---|
| 4450 | 400 | |
| 2351 | 343 | |
| | 434 | 5447 |
| 5123 | | 5357 |
| 2349 | 341 | |
| 5013 | 251 | |

நிரப்புங்கள்



## விளையாட்டு மூலை




தனுவிற்கு மட்டையும் பந்தும், தொனிக்கு சைக்கிளும் வாங்கினர்.



அப்பாவிடம் 4000 ரூபாய் உள்ளது.

- சைக்கிளின் விலை ________________
- மட்டை, பந்தின் விலை ________________
- கடையில் கொடுத்த ரூபாய் ________________

அப்பா கடையில் கொடுத்த ரூபாயை எந்தெந்த முறைகளில் நோட்டுகளாகவும் நாணயங்களாகவும் எழுத இயலும்.

| நான் கணக்கிட்ட முறை | நண்பன் கணக்கிட்ட முறை |
|---|---|
| | |

## மாயாஜாலம் (மேஜிக் மூலை)







### அறிவுறுத்தல்கள்

- நீங்கள் ஒரு நான்கிலக்க எண்ணை எழுத வேண்டும்
- நான் ஒரு எண்ணை எழுதி பெட்டியில் போடுவேன்.
- அதற்குப் பின் நீங்கள் எழுதிய எண்ணிற்குக் கீழே நான் ஒரு எண் எழுதுவேன்.
- மீண்டும் நீங்கள் ஒரு நான்கிலக்க எண்ணை எழுதலாம்.
- அதற்குக் கீழே நான் ஒரு நான்கிலக்க எண் எழுதுவேன்.
- இந்த நான்கு நான்கிலக்க எண்களின் தொகையை நீங்கள் கணக்கிட வேண்டும்.
- பின்னர் நான் எழுதி பெட்டியில் போட்ட எண்ணைக் காட்டுவேன்.

தனு எழுதிய எண் - 4325

வித்தைக்காரர் எழுதிய எண் - 5674

தனு எழுதிய எண் - 1408

வித்தைக்காரர் எழுதிய எண் - 8591

வித்தைக்காரர் காகிதத்தில் எழுதி பெட்டியிலிட்ட எண்ணையும் தொகையையும் பாருங்கள். இதிலிருந்து என்ன புரிந்து கொண்டீர்கள்?

தொகை ________________

**நான் கணக்கிட்டது**






இது 20000 த்தை விட 2 குறைவான எண் அல்லவா?

## புகைப்பட மூலை

தொனியும் தனுவும் புகைப்பட மூலைக்குச் சென்று புகைப்படம் எடுத்தனர். எண்கள் எழுதிய பட்டாம்பூச்சியில் உள்ள எண்களின் வரிசையைத் திருப்பி எழுதிக் கூட்டிப் பாருங்கள்.




தனு தேர்ந்தெடுத்த எண்

4123

வரிசை திருப்பி எழுதிய எண்

3214

**தனு கணக்கிட்ட முறை**

4123 = 4000 + 100 + 20 + 3

3214 = 3000 + 200 + 10 + 4

7000 + 300 + 30 + 7 = 7337

4123 + 3214 = 7337

தொனி எடுத்த எண் = 4002

திருப்பி எழுதிய எண் = ........

தொகை = ........

எப்படிக் கூட்ட வேண்டும்?

## விடைபூக்கள்

**எண் பட்டாம்பூச்சியில் உள்ள எண்களின் வரிசையை திருப்பி எழுதி கூட்டி கிடைத்த விடை வருகின்ற பூக்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்..**




### இரு வழி எண்கள்

இடது பக்கத்திலிருந்தும் வலது பக்கத்திலிருந்தும் ஒரே போல் வாசிக்க இயலும் எண்களே இருவழி எண்கள்.

எல்லா நான்கிலக்க எண்களின் வரிசையை திருப்பி எழுதிக் கூட்டினால் இருவழி எண்கள் கிடைக்குமா? கண்டுபிடித்தவற்றை குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## தொகை கணக்கிடலாம்.



## விளையாட்டு மூலை

தனுவும் தொனியும் கணினியில் கார் ஓட்டப் போட்டியில் விளையாடுகிறார்கள். விளையாட்டில் பங்கெடுத்தவர்களின் புள்ளிகளைப் பாருங்கள்.




| கிடைத்த புள்ளிகள் | | |
|---|---|---|
| பெயர் | சுற்று 1 | சுற்று 2 |
| தனு | 2143 | 1457 |
| தொனி | 1148 | 2067 |
| நன்மா | 1654 | 1188 |
| மினி | 1876 | 1124 |

தனுவுக்கு மொத்தம் எத்தனை புள்ளிகள் கிடைத்தது?

______________________________

**செயல்முறை - 1**

2143 + 1457

2143 + 1000 = 3143

3143 + 400 = 3543

3543 + 50 = 3593

3593 + 7 = 3600

**செயல்முறை - 2**

2143 + 1457

2143 = 2000 + 100 + 40 + 3

1457 = 1000 + 400 + 50 + 7

3000 + 500 + 90 + 10

= 3500 + 100

= 3600



**இப்படியும் எழுதலாம்**

$$\begin{array}{r} 2143 + \\ 1457 \\ \hline 3600 \end{array}$$

கார் ஓட்டப் போட்டியில் 3000 ற்கும் மேற்பட்ட புள்ளிகள் யாருக்கெல்லாம் கிடைத்தது? ஊகித்து எழுதுங்கள்.

..............................................................................................

..............................................................................................

## ஊகித்தது சரியா?

| கிடைத்த புள்ளிகள் | | | |
|---|---|---|---|
| பெயர் | சுற்று - 1 | சுற்று - 2 | மொத்தப் புள்ளிகள் |
| தனு | 2143 | 1457 | 3600 |
| தொனி | 1148 | 2067 | |
| நன்மா | 1654 | 1188 | |
| மினி | 1876 | 1124 | |

## தள்ளுபடி விற்பனை

அறிவிப்பை பாருங்கள்.




தொனியின் வீட்டிற்கு கட்டிலும் தொலைக்காட்சிப் பெட்டியும் வாங்க எத்தனை ரூபாய் வேண்டும்? ______

தொலைக்காட்சிப்பெட்டியும் அலமாரியும் வாங்குவதற்கு எத்தனை ரூபாய் வேண்டும்?

______

துணி துவைக்கும் இயந்திரமும் கட்டிலும் வாங்க எத்தனை ரூபாய் வேண்டும் ?______

கடையிலுள்ள ஒரு பொருளை வாங்கிவிட்டு நூறு எண்ணிக்கையுள்ள 100 ரூபாய் நோட்டுகளின் ஒரு கட்டை கொடுத்தனர். மீதி 1 ரூபாய் கிடைத்தது என்றால் அவர்கள் வாங்கிய பொருள் யாது?

______

- உங்களது கையில் 12000 ரூபாய் இருந்தால் என்னென்ன பொருள்களை வாங்குவீர்கள்? காரணத்தை எழுதுங்கள்.

## பேட்டிங் மூலை

தனுவும் தொனியும் பேட்டிங் மூலைக்குச் சென்றனர். ஒரு நபர் மூன்று ஓவர் பேட்டிங் செய்யலாம். ஒவ்வொரு ஓவர் முடியும் போதும் புள்ளிகள் கிடைக்கும். விளையாட்டின் இறுதியில் அவர்களுக்கு கிடைத்த புள்ளிகளைப்பாருங்கள்.














**பரிசு**

மொத்தப் புள்ளிகள் 7000 த்திற்கு அதிகமாக இருந்தால் டிராகன் ரயில் டிக்கெட் பரிசு.

### புள்ளி நிலவரம்

| பெயர் | கிடைத்த புள்ளிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| தனு | | | | |
| ஜின்சி | | | | |
| தொனி | | | | |

டிராகன் ரயில் பயணச்சீட்டு யாருக்கெல்லாம் கிடைத்தது. கண்டுபிடித்து எழுதுங்கள்.



(1) தொகையைக் கணக்கிட்டு விடுபட்ட கட்டத்தில் எழுதுங்கள்.

A என்ற கட்டத்தில் வரும் எண் கிடைப்பதற்கு 2850 +1400 கூட்டவேண்டும்.




A = ..........

B = ..........

C = ..........

D = ..........

E = ..........

**(2)** தொடர்ந்து வரும் **5** எண்களை எழுதுங்கள்.

- 4100, 5100, 6100, ............., ............., ............., ............., .............
- 2352, 2852, 3352 , ............., ............., ............., ............., .............
- 1000, 2111, 3222, ............., ............., ............., ............., .............
- 2839, 3748, 4657, ............., ............., ............., ............., .............

**(3)** விடுபட்ட கட்டத்தில் வரும் எண் எது?

| | |
|---|---|
| 1500 | 1750 |
| ? | 2050 |

(A) 3000 (B) 2400 (C) 2300 (D) 2150

**(4)** துப்பாக்கி சுடும் பலகையை பார்த்தீர்கள் அல்லவா? கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.




- அனைத்து சுற்றிலும் ஒரு முறை மட்டும் சுட்டால் எத்தனை புள்ளிகள் கிடைக்கும்?
- தொனி 3 முறை 1000 த்தின் கட்டத்திலும் 2 முறை 10 தின் கட்டத்திலும் சுட்டாள் எனில் அவளுக்குக் கிடைத்த புள்ளிகள் எத்தனை?
- தனு 10 முறை சுட்டபோது கிடைத்த எண் 5140 ஆகும். எந்தெந்த கட்டத்தில் எத்தனை முறை சுட்டிருப்பான்?
- 10 முறை சுட்டபோது கிடைத்த புள்ளிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது?

  (A) 5142, (B) 6280, (C) 4510, (D) 1245
- ஒருவர் பல முறை சுட்டபோது 3333 புள்ளிகள் கிடைத்தது. குறைந்தது எத்தனை முறை சுட்டிருப்பார்?

# 5
# நேரமாச்சு




11:30 முதல் 3:30 வரை எத்தனை மணிநேரம்?

11:15 முதல் 11:30 வரை எத்தனை நிமிடங்கள்?

11:15 முதல் 3:30 வரை .......... மணிநேரம் ........ நிமிடங்கள்?

## நிதியின் வீட்டில்

09:15:00




நிதியின் பள்ளிப் பேருந்து வரும் நேரத்தை கடிகாரத்தில் வரையுங்கள்.



............ மணி ........ நிமிடங்கள்

## நிதியும் நண்பர்களும் பள்ளியில்

டிஜிட்டல் கடிகாரத்தைப் பாருங்கள்...

09:29:52 | 09:29:53 | 09:29:54 | 09:29:55 | 09:29:56




09:29:57 | 09:29:58 | 09:29:59 | 09:30:00 | 09:30:01

09:30:02 | .............. | .............. | .............. | ..............



டிஜிட்டல் கடிகாரத்தில் தொடர்ந்து வரும் நேரத்தை நீங்கள் எழுதுங்கள்.

மேலேயுள்ள படத்தில் நேரத்தை கவனித்தீர்களா? என்னென்ன புரிந்து கொண்டீர்கள்?

9 மணி 29 நிமிடங்கள். 59 வினாடிக்கு அடுத்த நேரம் என்ன?

.............. மணி .............. நிமிடங்கள் .............. வினாடிகள்

29 நிமிடம் 59 வினாடிக்கு அடுத்த நேரத்தைப் பாருங்கள். எத்தனை? 30 நிமிடங்கள்.

இதிலிருந்து புரிந்து கொண்டது என்ன?



60 வினாடிகள்
1 நிமிடம்

**நான் கண்டறிந்தது.**

| | | | | |
|---|---|---|---|---|
| வினாடிகளும் நிமிடங்களும் | 00:58 | 00:59 | 01:00 | 01:01 |

## நிதி பள்ளியில்

நிதி பள்ளியை சென்றடைந்த நேரத்தைப் பாருங்கள் 09:40:00

நிதி பள்ளியை சென்றடைய எவ்வளவு நேரம் பயணம் செய்தாள்?

**நான் கண்டறிந்தது.**



## நடை போட்டி

நடை போட்டி ஆரம்பித்த நேரம் தான் டிஜிட்டல் கடிகாரத்தில் உள்ளது. **10:30:00**

குழந்தைகள் 100 மீட்டர் நடப்பதற்கு எடுத்துக்கொண்ட நேரத்தைப் பாருங்கள்.





| பெயர் | நேரம் |
|---|---|
| மிலி | 10:31:32 |
| தனு | 10:31:25 |
| சயா | 10:31:12 |
| நிதி | 10:31:29 |
| அயனா | 10:31:15 |







மிலி நடந்து முடித்த நேரம்.
......... மணி ......... நிமிடங்கள் ......... வினாடிகள்

எவ்வளவு நேரமானது? ......... நிமிடங்கள் ...... வினாடிகள்

மிகக்குறைந்த நேரத்தில் நடந்தது யார்?

_______________




நடக்க எடுத்துக் கொண்ட நேரம்?

_______________

போட்டியில் 1, 2, 3 இடங்கள் பெற்றவர்களின் பெயர்களை வரிசையாக எழுதுங்கள்.

நீங்களும் ஒட்டப்போட்டி நடத்துவீர்களல்லவா?
ஓடிச் சென்றடைந்த நேரத்தைக் கணக்கிடுங்கள்.

## சாற்று விளையாட்டு.










*கைப்பேசியிலுள்ள டிஜிட்டல் கடிகாரம்.*

**1** முதல் **50** வரை எண்ணுவதற்குத் தேவையான நேரம்.

**எனது ஊகம்.**




எண்ணுவதற்கு எடுத்துக் கொண்ட நேரம்? ____________________

நண்பர்கள் எண்ணுவதற்கு எடுத்துக் கொண்ட நேரத்தை அட்டவணையில் எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | | | |
| நேரம் | | | | |

எண்ணுவதற்கு எடுத்துக் கொண்ட குறைந்த நேரம் ____________________

கூடுதல் நேரம் ____________________

## எனது நேரம்

உங்களால் ஒரு நிமிடத்தில் செய்ய இயலும் செயல்களை எழுதுங்கள்.

- 
- 
- 
- 
- 
- 

## நடக்கலாம்... நேரம் பார்க்கலாம்...

வகுப்பறையின் சுவரோடு சேர்ந்து ஒரு முறை நடந்து செல்லுங்கள். நடக்க எடுத்துக் கொண்ட நேரத்தை ஸ்டாப் கடிகாரத்தைப் பயன்படுத்தி கண்டுபிடியுங்கள்...

______________________

### வட்டத்தில் சுற்றலாம்

வட்டம் வட்டம் சுற்றுதே
மணிக்கூர் முள் சுற்றுதே
இரண்டு முறை சுற்றி விட்டால்
முழுமை பெறும் நாளொன்று
வட்டம் வட்டம் சுற்றுதே
நிமிடமுள் சுற்றுதே
எத்தனை முறை சுற்ற
வேண்டும் நிறைவு பெற
நாளொன்று?

### புதிர் மூலை

கீழேகொடுக்கப்பட்டுள்ள எண்ணைப் பாருங்கள்...

101

எண்ணிலுள்ள ஏதாவது இரண்டு கோடுகளை மட்டும் எடுத்து மாற்றி உருவாக்க இயலுகின்ற மிகப்பெரிய எண் எது?

______________________

101 - பூஜ்யத்திலிருந்து ஒரு கோட்டை எடுத்து பூஜ்யத்தின் நடுவில் வைக்கப்பட்டுள்ளது. எத்தனை கிடைத்தது? 191

191 ஐ விட பெரிய எண்களை உருவாக்க முடியுமா?

## ஆரம்பம் முதல் கடைசி வரை

படத்தைப் பாருங்கள். வரையத் தொடங்கினால் வரைந்து முடியும் வரை பென்சிலை காகிதத்திலிருந்து எடுக்கக்கூடாது. வரைந்த கோட்டின் மீது மீண்டும் வரையக்கூடாது. வரைவதற்கு எவ்வளவு நேரம் ஆனது?



............... வினாடிகள்




## நமது கடிகாரம்

நிதியின் வகுப்பிலுள்ள குழந்தைகள் கடிகாரத்தை உருவாக்குகின்றனர்.











எத்தனை மணிக்குள்

உருவாக்க முடியும்?




கடிகாரத்தில் வரையுங்கள்



கடிகாரம் உருவாக்க எடுத்துக்கொண்ட நேரத்தை நிமிடத்தில் எழுதுங்கள்.

................. நிமிடங்கள்

ஆகா !!
2 மணிக்கூர்
= 120 நிமிடங்கள் !
= 7200 வினாடிகள் !!

நிதி உருவாக்கிய கடிகாரத்தைப் பாருங்கள்.



வினாடிமுள் 9 இல் இருந்து 12 ஐ சென்றடைய எடுத்துக் கொள்ளும் நேரம் ........... வினாடிகள்.

கடிகாரத்திலுள்ள நேரத்தை எழுதுங்கள் ..........மணி ....... நிமிடங்கள் .............. வினாடிகள்.

மணிமுள் ஒரு முறை சுற்றுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம்

............... மணிநேரம்

நிமிடமுள்?

............... மணிநேரம்

வினாடி முள்?

............... நிமிடங்கள்

கடிகாரத்திலுள்ள மூன்று முள்களில் மிகவும் வண்ணம் குறைந்ததும் நீளம் கூடியதுமான முள் வினாடி முள் ஆகும்.

மிகவும் விரைவில் சுழலுகின்ற முள் எது? ______________

## கடிகாரத்தைப் பாருங்கள்... நேரம் எழுதுங்கள்...

| படம் | நேரம் | | |
|---|---|---|---|
| | மணி | நிமிடங்கள் | வினாடிகள் |
|  | | | |
|  | | | |

## நேரத்தைக் கடிகாரத்தில் வரையுங்கள்...

| | |
|---|---|
|  12 மணி<br>50 நிமிடங்கள்<br>30 வினாடிகள் |  6 மணி<br>5 நிமிடங்கள்<br>16 வினாடிகள் |

### புதிர் மூலை.

ஒரு மணிக்கூருக்கு முன்பு, நேரம் 10 மணி 15 நிமிடங்களாக இருந்தது. இரண்டரை மணிக்கூருக்கு பின்பு நேரம் என்ன?

___________________________

## பலதுள்ளி பெருவெள்ளம்.



இந்தக் குழாயிலிருந்து ஒரு வினாடியில் ஒரு மில்லிலிட்டர் தண்ணீர் வீதம் ஒழுகுகிறது. 10 நிமிடத்தில் எத்தனை மில்லிலிட்டர் தண்ணீர் ஒழுகும்?

____________________




**நான் கணக்கிட்ட முறை**

### வினாடிகள் மட்டும்

| | |
|---|---|
| வினாடிமுள் 12 லிருந்து 1 ற்குச் செல்ல எடுத்துக் கொள்ளும் நேரம் | |
| வினாடிமுள் 12 லிருந்து 2 ற்குச் செல்ல எடுத்துக் கொள்ளும் நேரம் | |
| வினாடிமுள் 12 இல் தொடங்கி 15 வினாடிக்கு பிறகு எந்த எண்ணிற்கு நேராக இருக்கும்? | |
| வினாடி முள் வட்டத்தின் பாதி பாகம் சுற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம்? | |



## சமையல் போட்டி

முன்னாள் மாணவர்கள் சந்தித்தபோது பள்ளியில் பல விதமான பாயாசம் செய்தனர்.

சமையல் தொடங்கிய நேரம் கடிகாரத்தில் உள்ளது.









ஒவ்வொருவரும் சமையல் செய்வதற்கு எடுத்துக் கொண்ட நேரத்தை அவர்களின் அருகிலுள்ள கடிகாரத்தில் வரையுங்கள்.

சமையல் செய்வதற்கு எடுத்துக் கொண்ட கூடுதல் நேரம் __________

மிகவும் குறைந்த நேரம் __________

## அறிவிப்புப் பலகை

### டிசம்பர் 22

### தேசிய கணித தினம்

தேசிய கணித தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு போட்டிகள் **20.12.2025** அன்று நடைபெறும். போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் இன்று மதியம் 1.30 மணிக்குள் தங்கள் வகுப்பாசிரியரிடம் பெயரைப் பதிவு செய்ய வேண்டும்.

போட்டி இனங்கள் 15.12.2025

- கணித வினாடிவினா
- கணித புதிர்
- தொடர் அமைத்தல்




பெயர் பதிவு செய்ய வேண்டிய கடைசி தேதி எது? ____________________

உப மாவட்ட போட்டி 1.1.2026 இல் நடைபெறும்.

- பள்ளி அளவிலான போட்டிகள் முடிந்து எத்தனை நாட்களுக்குப் பின் உபமாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறும்?

____________________

## நாட்காட்டியைப் பாருங்கள்... கண்டுபிடியுங்கள்...

- இந்த வருடத்தின் நாட்காட்டியைப் பாருங்கள்... டிசம்பர் 22 என்ன கிழமை?

  ____________________

- மார்ச் 28 வியாழக்கிழமை ஆகும். மார்ச் 11 என்ன கிழமை?

  ____________________

- இன்று ஞாயிற்றுக் கிழமை. 24- ஆம் நாள் என்ன கிழமை?

  ____________________

## நாட்காட்டி கணக்கு




நாட்காட்டியில் அடையாளப்படுத்திய ஒவ்வொரு தொகுப்பிலுள்ள எண்களையும் பாருங்கள். அவற்றிற்கு ஏதாவது தொடர்பு உள்ளதா? குறிப்பேட்டில் எழுதுங்கள்.

தொடர்ந்து வரும் எண்களை எழுதுங்கள்.

- 3, 10, 17, ——, ——
- 4, 12, 20, ——, ——
- 2, 8, 14, ——, ——

**நான் கண்டறிந்தவை**

- நாட்காட்டியிலிருந்து இதுபோன்ற கூடுதல் எண்தொடர்களைக் கண்டுபிடியுங்கள்.

1. நிதியின் பள்ளியிலிருந்து காலை 5:30 மணிக்கு உல்லாசப் பயணம் சென்ற பேருந்து மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்களுக்குச் சென்றுவிட்டு மாலை 5:30 மணிக்கு பள்ளியை சென்றடைந்தது. பயணம் செய்ய எடுத்துக் கொண்ட நேரம் எவ்வளவு?
2. மணி முள் 7 லிருந்து 3 ற்குச் செல்ல எடுத்துக் கொள்ளும் நேரம் எவ்வளவு?
3. வினாடி முள் 5 இல் இருந்து 11 ஐ சென்றடைய எடுத்துக் கொள்ளும் நேரம் ..............வினாடிகள் ஆகும். இது .................... நிமிடங்களாகும்.
4. 2 மணிக்கூர் முன்பு ஒன்பதரை மணி ஆகும். மூன்றரை மணிக்கூருக்குப் பின் நேரம் என்ன?
5. ஜனவரி மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை 2-ஆம் தேதியாகும். வெள்ளிக்கிழமை வரும் பிற தேதிகள் எவை எல்லாம்?
6. ஏழாம் தேதி வியாழக்கிழமை எனில் பதினேழாம் தேதி என்ன கிழமை? 27-ஆம் தேதி என்ன கிழமை?
7. நேரம் எழுதுங்கள்...



.............. மணி
.............. நிமிடங்கள்
.............. வினாடிகள்



.............. மணி
.............. நிமிடங்கள்
.............. வினாடிகள்

8 நேரத்தைப் பாருங்கள்... கடிகாரத்தில் வரையுங்கள்...



4 மணி
28 நிமிடங்கள்
44 வினாடிகள்



1 மணி
45 நிமிடங்கள்
40 வினாடிகள்

# 6
# குறையும் கூட்டம்



## மணிச்சட்டம்

கிச்சுவும் நண்பர்களும் மணிச்சட்டம் உருவாக்கி விளையாடுகின்றனர்




- மணிச்சட்டத்திலுள்ள எண் எது? ________________

- இந்த எண்ணிலிருந்து எத்தனை கழித்தால் மிகச்சிறிய மூன்றிலக்க எண் கிடைக்கும்? ________________

- கழித்துக் கிடைத்த எண்ணை மணிச்சட்டத்தில் வரையுங்கள்.




**நிரப்புங்கள்**

99 – 10 = .............

999 – 100= .............

9999 – 1000 = .............

## கழித்து பார்ப்போம்

- மிகப்பெரிய மூன்றிலக்க எண்ணிலிருந்து மிகப்பெரிய இரண்டிலக்க எண்ணைக் கழித்தால் கிடைக்கும் எண்? ______________

- 340 இல் இருந்து 120 ஐ கழித்தால்

கிச்சுவின் விடையைப்பாருங்கள்...

34 பத்தில் இருந்து 12 பத்தைக் கழித்தால் போதும்.

34 பத்து − 12 பத்து

= ______________ பத்து = ______________



16 பத்துகளுடன் எத்தனை பத்துகளைக் கூட்டினால் 34 பத்துகள் கிடைக்குமென கணக்கிட்டாலும் போதும்.

- 340 இல் இருந்து 160 ஐ கழிக்க வேண்டும் எனில்?

செய்து பாருங்கள்.....

- 346 இல் இருந்து 162 ஐ கழிக்கலாமா?

### செயல்முறை : 1

162 உடன் எத்தனை கூட்டினால் 346 கிடைக்குமென்று கணக்கிட்டாலும் போதும்.

162 + 8 = 170

170 + 30 = 200

200 + 146 = 346

146 + 30 + 8 = 140 + 6 + 30 + 8

= 140 + 30 + 14

= 170 + 14

= 184

### செயல்முறை : 2

346 → 300 + 40 + 6 −

162 → 100 + 60 + 2

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 3 | 4 | 6 |
| 1 | 6 | 2 |

−

இதனை மாற்றி எழுதினால்

346 → 200 + 140 + 6 −

162 → 100 + 60 + 2

100 + 80 + 4

இப்படியும் எழுதலாம்

| நூறு | பத்து | ஒன்று |
|---|---|---|
| 2 | 14 | 6 |
| 1 | 6 | 2 |
| | | |

−

**346 - 162 = 184**



இது போன்றும் எழுதலாம்

346 −

162

184

- கிச்சு மணிச்சட்டத்தில் உருவாக்கிய எண் 876 ஆகும். சிப்பி உருவாக்கியது 697. சிப்பியின் எண்ணைவிட கிச்சுவின் எண் எத்தனை கூடுதல்?

- உங்களது கையில் 13 முத்துகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி மணிச்சட்டத்தில் உருவாக்க இயலுகின்ற மிகப்பெரிய மூன்றிலக்க எண்ணையும் மிகச்சிறிய மூன்றிலக்க எண்ணையும் எழுதவும். அவற்றுக்கிடையே உள்ள வித்தியாசம் எத்தனை?

மிகப்பெரிய மூன்றிலக்க எண் ______________

மிகச்சிறிய மூன்றிலக்க எண் ______________

வித்தியாசம் ______________

## சரியான விடை எது?

- 761 – 380 எந்தெந்த எண்களுக்கு இடையிலாகும்?

i) 400 க்கும் 500 க்கும் இடையில்

ii) 400 க்கும் 420 க்கும் இடையில்

iii) 380 க்கும் 400 க்கும் இடையில்

iv) 350 க்கும் 380 க்கும் இடையில்

எனது விடை

______________________________

**கழித்து பார்க்கலாம்**

8 – 1 = 7

88 – 11 = ............

888 – 111= ............

8888 – 1111= ............

## கண்டுபிடிக்கலாம்...
## பரிசை வெல்லலாம்...

கிச்சுவும், நண்பர்களும் விளையாடிய இன்றைய விளையாட்டில் கிச்சுவின் அக்கா அம்முவும் சேர்ந்து கொண்டாள்.









இது போன்றும் எழுதலாம்.

| ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் |
|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 |
| 3 | 5 | 4 | 2 |
| | 2 | 5 | 6 |

$-$

$3542 + \boxed{8} = 3550$

$3550 + \boxed{50} = 3600$

$3600 + \boxed{100} = 3700$

$3700 + \boxed{98} = 3798$

$\boxed{8 + 50 + 100 + 98} = 100 + 98 + 58$

$= 100 + 98 + 2 + 56$

$= 100 + 100 + 56$

$= \mathbf{256}$




வேறு எந்தெந்த செயல் முறைகளில் கணக்கிடலாம்?




| ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் |
|---|---|---|---|
| 5 | 8 | 4 | 9 |
| 2 | 6 | 1 | 7 |
| | | | |

$-$




### நான் எழுதியது.

- ......... ஆயிரங்கள் ......... நூறுகள் ......... பத்துகள் ......... ஒன்றுகள் என்பனவற்றைக் கூட்டும்போது கிடைக்கும் எண் எது?
- ......... , ......... என்ற எண்களை கூட்டும் போது கிடைக்கும் எண் எது?

### கூடுதல் வினாக்கள் எழுதுங்கள்...

- 
- 
- 

### பரிசு.

2837, 524 இவற்றின் வித்தியாசம் என்ன?









## கணக்குப் பெட்டி

கிச்சு கணக்குப் பெட்டியில் இருந்து சதுர அட்டைகளை எடுத்துக்கொண்டு நண்பர்களோடு விளையாடுவதற்காக ஆலமரத்தின் அடியில் வந்தான்.

படத்தைப் பாருங்கள்...



எத்தனை ஆயிரங்கள் உள்ளன? ____________

எத்தனை நூறுகள் உள்ளன? ____________

எத்தனை பத்துகள் உள்ளன? ____________

எத்தனை ஒன்றுகள் உள்ளன? ____________

எண் எது? ____________

இதில் உள்ள 1251 சதுரங்களுக்கு மின்னி வண்ணம் தீட்டினாள்.

**புதிர் மூலை**

நான் ஐந்தாயிரத்திற்கும்
எட்டாயிரத்திற்கும்
இடையில் உள்ள
இரட்டை எண்.
தொடர்ச்சியான நான்கு
எண்களாகும்.
நான் யார்?

## வண்ணம் தீட்டுங்கள்.

நீங்களும் 1251 சதுரங்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.






வண்ணம் தீட்டாத சதுரங்களில்

ஆயிரங்களின் எண்ணிக்கை ________

நூறுகளின் எண்ணிக்கை ________

பத்துகளின் எண்ணிக்கை ________

ஒன்றுகளின் எண்ணிக்கை ________

எண்? ________

| ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் | |
|---|---|---|---|---|
| 2 | 3 | 4 | 3 | − |
| 1 | 2 | 5 | 1 | |

இவ்வாறு மாற்றி எழுதலாம்.

| ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் | |
|---|---|---|---|---|
| 2 | 2 | 14 | 3 | − |
| 1 | 2 | 5 | 1 | |
| .......... | ........ | .......... | ........ | |

## கழிக்கலாம்

சதுர அட்டைகளைப் பயன்படுத்தி 3625 இல் இருந்து 1812 ஐ கழிக்கவும்.

வித்தியாசம் கணக்கிட்ட முறையை குறிப்பேட்டில் எழுதுங்கள்.

## மின்சாரக் கட்டண ரசீது




கிச்சுவினுடைய வீட்டில் இந்த மாதத்தில் மின்சார ரீடிங் 4526.

இதற்கு முன்னர் ரீடிங் 3845.

கிச்சுவின் வீட்டில் மின்சார பயன்பாடு கணக்கிட்ட முறைகளைப் பாருங்கள்.

### செயல்முறை - 1

4526 – 3845




5 + 50 + 100 + 526 = 681

## செயல்முறை - 2

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4000 + | 500 | + | 20 + | 6 | - | | | |
| 3000 + | 800 | + | 40 + | 5 | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4000 + | 400 + | 120 + | 6 | - |
| 3000 + | 800 + | 40 + | 5 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3000 + | 1400 + | 120 + | 6 | - |
| 3000 + | 800 + | 40 + | 5 | |
| | 600 + | 80 + | 1 | |

4526 – 3845

4526 – 3000 = 1526

1526 – 800 = 726

726 – 45 = 681

| எண் | ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் |
|---|---|---|---|---|
| 4526 | 3 | 14 | 12 | 6 |
| 3845 | 3 | 8 | 4 | 5 |
| | | 6 | 8 | 1 |

–



இவ்வாறும் எழுதலாம்

| | | | |
|---|---|---|---|
| 3 | 14 | 12 | |
| 4 | 5 | 2 | 6 - |
| 3 | 8 | 4 | 5 |
| | 6 | 8 | 1 |

## மீட்டர் ரீடிங்

கிச்சுவின் நண்பர்களின் வீட்டில் உள்ள மீட்டரின் ரீடிங் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அட்டவணையை நிரப்புங்கள்.

| பெயர் | மீட்டர் ரீடிங் | | 2 மாதத்தின் மின்சார பயன்பாடு |
|---|---|---|---|
| | பிப்ரவரி | ஏப்ரல் | |
| சிப்பி | 4215 | 4826 | ................... |
| ஜீனா | ................... | 5278 | 400 |
| ஹாரிஸ் | 6970 | 7340 | ................... |
| மின்னி | 5870 | ................... | 395 |

மிகக் கூடுதல் மின்சாரம் பயன்படுத்தியது யாருடைய வீட்டில்? __________

உங்கள் வீட்டில் இந்த மாத மின்சார ரீடிங் எவ்வளவு? ______________

## சர்க்கஸ்


அப்பா ! நாம் இன்று சர்க்கஸ் பார்க்க போவோமா?
சாயங்காலம் போகலாம்


டிக்கெட் விபரம்
குழந்தைகளுக்கு 90 ரூபாய், பெரியவர்களுக்கு 180 ரூபாய்

கிச்சுவும், குடும்பத்தினரும் சர்க்கஸ் கூடாரத்திற்குச் சென்று நுழைவுசீட்டு எடுத்தனர்.

4 பேருடைய டிக்கெட்டுக்கு எத்தனை ரூபாய் ஆனது? ____________

500 ரூபாயின் இரண்டு நோட்டுகள் கவுண்டரில் கொடுத்தனர்.

மீதி எத்தனை ரூபாய் கிடைத்தது? ____________

**செயல்முறை - 1**

| | | | | |
|---|---|---|---|---|
| 1000 | – | 540 | | |
| 540 | + | 60 | = | 600 |
| 600 | + | 400 | = | 1000 |
| 60 | + | 400 | = | 460 |

**செயல்முறை - 2**

$$1000 - 540 = (1000 - 1) - (540 - 1)$$
$$= 999 - 539$$
$$= 460$$

**செயல்முறை - 3**

| | | | | |
|---|---|---|---|---|
| 1000 | – | 540 | | |
| 1000 | – | 500 | = | 500 |
| 500 | – | 40 | = | 460 |

| ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் |
|---|---|---|---|
| 1 | 0 | 0 | 0 |
| | 5 | 4 | 0 |

–

| ஆயிரங்கள் | நூறுகள் | பத்துகள் | ஒன்றுகள் |
|---|---|---|---|
| | 9 | 10 | 0 |
| | 5 | 4 | 0 |
| .......... | ...... | ....... | ....... |

–



இப்படியும் எழுதலாம்

$$\begin{array}{r} 1000 - \\ 540 \\ \hline \mathbf{460} \end{array}$$

| | | | | |
|---|---|---|---|---|
| 1000 | – | 100 | = | 900 |
| 1000 | – | 500 | = | ............ |
| 1000 | – | 250 | = | ............ |
| 1000 | – | 820 | = | ............ |
| 1000 | – | 990 | = | ............ |

## ரூபாய் நோட்டுகள்... நாணயங்கள்...

சர்க்கஸ் காணச் சென்றபோது மீதி கிடைத்த ரூபாயை நோட்டுகளாகவும் நாணயங்களாகவும் எழுதுங்கள்.




எத்தனை ரூபாய் நோட்டுகள்? __________

எத்தனை நாணயங்கள்? __________

100 ரூபாய் நோட்டுகள், 10 ரூபாய் நோட்டுகள் மட்டும் இருந்திருந்தால் எத்தனை ரூபாய் நோட்டுகள் கிடைத்திருக்கும்?

| |
|---|
| |

இந்தத் தொகையை 10 நோட்டுகளாக்கிக் கொடுப்பதற்கு எந்தெந்த நோட்டுகள் எத்தனை வீதம் எடுக்க வேண்டும்?

| |
|---|
| |

## சேமிப்பு







கிச்சுவும், மின்னியும் விளையாட்டு ரூபாய் நோட்டுகளைப் பயன்படுத்தி வங்கி விளையாட்டை விளையாடுகின்றனர். பாஸ்புக்கில் எழுதிய எண்களை பாருங்கள்.

| பெயர் கிச்சு | | | |
|---|---|---|---|
| தற்போதுள்ளது | | திரும்ப பெற்றது | |
| தேதி | தொகை | தேதி | தொகை |
| 14.10.2025 | 5484 | 14.10.2025 | 3295 |

கிச்சு தனது சேமிப்பிலிருந்து 3295 ரூபாய் திரும்ப பெற்றான். மீதம் எவ்வளவு ரூபாய் உள்ளது?

### செயல்முறை - 1

5484 - 3295

5000 - 3000 = 2000

484 - 300 = 184

484 - 295 = 184 + 5 = 189

2000 + 189 = 2189






## செயல்முறை - 2

5484 - 3295

**நான் கணக்கிட்ட முறை**

**வேறொரு முறை**

மின்னியின் பாஸ்புக்கை பார்த்து அவள் வங்கி கணக்கில் மீதி உள்ள தொகையைக் கணக்கிடுங்கள்.

| பெயர் : மின்னி | | | |
|---|---|---|---|
| தற்போது உள்ளது | | திரும்ப பெற்றது | |
| தேதி | தொகை | தேதி | தொகை |
| 14.10.2025 | 4971 | 14.10.2025 | 2784 |

மின்னியின் சேமிப்பிலிருந்து 2784 ரூபாய் திரும்பப் பெற்றால் மீதமுள்ள ரூபாய் ____________

**நான் கணக்கிட்ட முறை**

**வேறொரு முறை**

**புதிர் மூலை**

**எண் எது?**

ஒரு நான்கு இலக்க எண்ணோடு 6349 கூட்டியபோது 8778 கிடைத்தது. எனில் எண் எது?

## வியாபார விளையாட்டு

மறுநாள் நண்பர்கள் ஆலமரத்தடியில் கடை வைத்தனர். வங்கியில் இருந்து திரும்பப் பெற்ற தொகையுடன் மின்னியும் கிச்சுவும் கடைக்கு வந்தனர்.




### கடையிலிருந்து வாங்கியவை

**கிச்சு**

காலணி
கால் பந்து
புத்தகப்பை

**மின்னி**

மட்டை (பேட்)
குடை

பொருட்கள் வாங்கிய பிறகு கிச்சுவின் கையில் மீதி உள்ள தொகை எவ்வளவு?
மின்னியின் கையில்?

**கிச்சுவின் கையில் மீதி உள்ள தொகை**

**மின்னியின் கையில் மீதி உள்ள தொகை**

ஜீனாவிற்கு சைக்கிள் வாங்க வேண்டும். ஜீனாவிடம் 4275 ரூபாய் உள்ளது.

இனி எத்தனை ரூபாய் வேண்டும்?

சைக்கிளின் விலை? ___________

**நான் கணக்கிட்ட முறை**

1. தொடர்ந்து வரும் மூன்று எண்களை எழுதுங்கள்.

- 6772, 6572, 6372, ___________ , ___________ , ___________
- 2365, 2254, 2143, ___________ , ___________ , ___________
- 5368, 5438, 5508, ___________ , ___________ , ___________

2. கிச்சுவின் வீட்டிற்கு ஒரு மாத மளிகைப் பொருட்கள் வாங்கிய போது ரூபாய் 5372 செலவு ஆனது. அவர்களிடம் இருந்த 3685 ரூபாய் கொடுத்தனர். மீதி ரூபாயை யூ.பி.ஐ (UPI) வழிகொடுத்தனர், எனில் யூ.பி.ஐ வழி கொடுத்தது எத்தனை ரூபாய்.

3. 8 ஆயிரங்கள் 27 பத்துகள் மற்றும் 5 ஒன்றுகளின் தொகையிலிருந்து 43 நூறும் 57 பத்தும் கூட்டி கிடைத்த எண்ணைக் கழிக்கவும்.

4. உங்கள் கையில் 18 முத்துகள் உள்ளன. இதனை பயன்படுத்தி மணிச்சட்டத்தில் உருவாக்கக்கூடிய மிகப்பெரிய நான்கு இலக்க எண்ணையும் மிகச் சிறிய நான்கு இலக்க எண்ணையும் எழுதவும். இவற்றிற்கு இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு?

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதினான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

KERALA STATE COMMISSION FOR PROTECTION OF CHILD RIGHTS

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,

பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring** : **www.nireekshana.org.in***